ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நாட்டுப்புறச் சிறார் விளையாட்டுகள்: குட்டி ஆகாயம் இதழை முன்வைத்து

**முனைவர் போ. ஜான்சன்**

**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)**

**திருச்சிராப்பள்ளி – 620 002**

**மின்னஞ்சல்: johnson_ta2@mail.sjctni.edu**

**ஆய்வுச்சுருக்கம்**

நாட்டுப்புறச் சிறார் விளையாட்டுகள் என்ற பரந்த தலைப்பின்கீழ் குட்டி ஆகாயம் எனும் சிறார் இதழ் வெளிப்படுத்தியுள்ள சில விளையாட்டுகளை எடுத்துக்கொண்டு அவற்றின் தன்மையும், நலிந்துவரும் சிறார்களின் விளையாட்டு மனநிலையையும் எடுத்துக்கூறுவதே முதன்மை நோக்கமாக அமைந்துள்ளது. சிறார்கள் என்ற சொல்லாடல் யாரைக் குறிக்கிறது, அவர்களுக்கான நேரத்தை ஆக்கிரமித்துள்ள செயல்பாடுகள் உள்ளிட்டவை ஆராயப்பட்டுள்ளது. விளையாட்டு என்பது பொழுதுபோக்கு மட்டுமல்ல; அவை சிந்தனைத் திறனை, உடல் வலிமையை, குழு மனப்பான்மையை, பிறரிடத்துக் காட்டப்படும் அன்பை வெளிப்படுத்துகிறது. இன்றைய குழந்தைகளிடத்தில் விளையாட்டு என்பது பெரும்பான்மையோர் விரும்பும் சில விளையாட்டுகளையே முன்னிறுத்துகிற வழக்கம் இருக்கும்போது, சிறார்களின் உலகம் தனிமரம் அன்று; அவை அடர்வனம் என்ற எண்ணத்தை முன்னிறுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**குறிப்புச் சொற்கள் :** சிறார்கள் - குழந்தைகள் – சிறுவர் – சிறுமியர் - விளையாட்டு – குட்டி ஆகாயம் – வானம் – கற்றல் அட்டைகள் – இதழ் – வார்த்தைகள்

**தொடக்கமாக**

தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களில் முக்கியமான ஒன்று நாட்டுப்புற விளையாட்டுகளாகும். இவை பல நூற்றாண்டுகளாகப் பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனைவராலும் மிகச்சிறப்பாக விளையாடப்பெற்றன. இன்றைய நவீன உலகில் அதனை மீட்டுருவாக்கம் செய்யவேண்டிய தேவை உள்ளது. விளையாட்டு என்பது மனிதனை உளவியல் ரீதியாகவும், சமநிலையில் சிந்திக்கவும், மன உறுதியை அதிகரிக்கவும், சிந்தனைத் திறனை மேம்படுத்தவும் என பல்வேறு காரணிகளை உள்ளடக்கியதாக அமைகிறது. விளையாட்டு மைதானங்களே இன்றைய நவீன காலத்தில் சுருங்கிச் சென்ற சமயத்தில் அதனை மீட்டெடுக்க சில தன்னார்வ அமைப்புகள்

ஆர்வம் காட்டுகின்றன. அதன்படி இன்றைய அரசும் நாட்டுப்புற விளையாட்டகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

சிறார் என்ற சொல்லாடல் பொதுவாகக் குழந்தைகளையே குறிக்கிறது. இருப்பினும் சிலர் சிறுவர், சிறுமியர், குழந்தைகள் என்ற வகைப்பாட்டில் வயதிற்கு ஏற்றாற்போல் பயன்படுத்துவதையும் காணமுடிகிறது. இருப்பினும் இங்கு சிறார் என்ற வகைப்பாட்டில் 14 வயதிற்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் கொள்ளப்பெற்றுள்ளன.

இன்றைய அறிவியல் வளர்ச்சியடைந்த சிறார்களின் உலகில் விளையாட்டு என்பது ஒரு சிறிய கருவியினுள் அடங்கிக் கிடக்கின்றதாக அமைந்துவிடுகிறது. இவ்வாறான இருக்கமான சூழலைச் சிறார்களிடத்திலிருந்து விடுவித்து அவர்களின் உலகத்தை அறியச் செய்யும் முயற்சியில் இறங்கியதுதான் குட்டி ஆகாயம் எனும் சிறார் இதழ். இந்தக் காலாண்டு இதழ் சிறார்களிடம் மறைந்துவிட்ட பாரம்பரிய விளையாட்டுகளை மீள அறிமுகப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதன்வழிச் சிறார் நாட்டுப்புற விளையாட்டுகளையும் அதன் தாக்கத்தையும் ஆய்வு செய்கிறது.

**நாட்டுப்புறச் சிறார் விளையாட்டுகள்**

தமிழர் வாழ்வியலில் விளையாட்டு என்பது சுறுசுறுப்பிற்கான கருவியல்ல; அது கல்விக்கும் பண்பாட்டிற்குமான தூணாகவே விளங்கியது. பல்வேறு வட்டாரங்களில் தோன்றிய பலவிதமான விளையாட்டுகளான **தென்னைமரத்து விளையாட்டு, பருப்புக் கடைந்து, அத்தளி புத்தளி, கில்லாப் பறண்டி, உச்சரிப்பு விளையாட்டு, தட்டலங்கா – புட்டலங்கா, ஐயன் கொம்பு, வினா விடைச் சங்கிலி, சீப்பு விக்கிது** (பாலசுப்பிரமணியம், தமிழர் நாட்டு விளையாட்டுகள்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதன்மூலம் குழுவாக விளையாடும் பழக்கம், சமூக ஒற்றுமை, இயற்கையைப் பார்க்கும் பழக்கம், சுற்றுசூழல் விழிப்புணர்வு, வட்டார அடையாளம், பாரம்பரிய பிணைப்பு போன்ற சமூகம் சார்ந்த நன்மைகளும் இவ்விளையாட்டுகளால் வளர வாய்ப்புள்ளது.

விளையாட்டுப் பாடல்கள் பொதுவாக இரு வகையில் பிரிக்கப்பட்டுள்ளது. அவை உடற்பயிற்சி விளையாட்டு, வாய்மொழி விளையாட்டு என்பனவாகும். அவற்றிற்கும் உள் பிரிவுகள் உண்டு. நாட்டுப்புறப்பாடல்கள் வாய்மொழியாகவே மக்களிடத்தில் வழங்கி வருகின்றன. இந்த வாய்மொழி இலக்கியங்கள் தற்காலத்தில் பெருமுயற்சிகள் எடுத்து எழுத்துவடிவில் பதிவாக்கம் செய்யப்படுகின்றன. குறிப்பாக நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றான, சிறுவர் பாடல்கள் தற்காலத்தில் தேய்ந்து அருகி வருகின்றன. இதற்குக் காரணம் சிறுவர்கள் தம்விளையாட்டு எண்ணம் மறக்கப்பெற்று அவற்றிக்கு நேரமும் வாய்ப்பும் இல்லாமல் போனது என்பதே ஆகும். சிறுவர்கள்தம் விளையாட்டு எண்ணம் தொலைக்காட்சி, கணினி விளையாட்டு ஆகியவற்றால் கவரப்பெற்று விளையாட்டு, ஆடல், பாடல், விடுகதை போன்றவற்றிற்கு நேரம் இல்லாமல் போயிற்று. விளையாட்டைக் காண்பவர்களாக மட்டுமே இக்காலக் குழந்தைகள் வளர்ந்து

வருகின்றனர் என்று குறிப்பிடுவார் மூ. கருணாநிதி **(நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுகள்)**.

நாட்டுப்புற விளையாட்டுகளைப் பொறுத்த அளவில் அதன் இயல்பு, பயன், காரணம் பற்றிய கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, **மிகை ஆற்றல் கொள்கை, ஆயத்தக் கொள்கை, புனாராக்கக் கொள்கை, பொழுதுபோக்குக் கொள்கை, காதலுதற் கொள்கை, போட்டி மனப்பான்மை** போன்றன என்று பட்டியிடுகிறார் சி. சுந்தரேசன் **(நாட்டுப்புற விளையாட்டுகள்)**.

இவ்வாறாக நாட்டுப்புற விளையாட்டுகளைப் பல்வேறு தளங்களில் பல்வேறு ஆய்வாளர்கள் தங்களின் கருத்தினை முன்வைக்கின்றனர். குட்டி ஆகாயம் எனும் சிறார் இதழ் சிறார்களின் விளையாட்டினை மையமாக வைத்துச் சிறார் விளையாட்டுச் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது. அதனைக் குறித்த கருத்தாடலை இக்கட்டுரை முன்மொழிகிறது.

**குட்டி ஆகாயம் சிறார் இதழ்**

ஒவ்வொரு குழந்தையும் நட்சத்திரம் எனும் குறிப்போடு குட்டி ஆகாயம் சிறார் இதழ் காலாண்டிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. வானம் அமைப்பு குழந்தைகளின் படைப்பாற்றலுக்கும் அவர்கள் தங்களை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பும் வடிவங்களுக்கும் களம் அமைத்துத் தொடர்ந்து இயங்கிவருகிறது. கதை சொல்லல், ஓவியம், களிமண் உருவங்கள், திரைப்படம், பொம்மலாட்டம், பாடல் போன்ற கலையின் பல்வேறு வடிவங்களின் வழியே குழந்தைகளுக்கும் எங்களுக்கும் இடையிலான ஒரு ஆரோக்கியமான உரையாடல் வடிவம் பெற்றுவருகிறது. கதை சொல்லிகள், நாடகக் கலைஞர்கள், ஓவியர்கள் முதலான பல கலைஞர்களும், குழந்தைகளோடு இயங்க விரும்பும் நண்பர்களும் சந்தித்துக்கொள்ளும் இடமும் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகிறது. சமூகத்தின் விளிம்பு நிலையிலோ அல்லது அதிக கவனத்தைக்கோரும் நிலையிலோ இருக்கும் குழந்தைகள் இந்த சந்திப்பில் பிரதானமானவர்கள். அந்தக் குழந்தைகளைச் சந்திக்க தமிழகமெங்கும் ஆர்வமுள்ள நண்பர்களோடு பயணிக்கிறது வானம். அந்தப் பயணத்தில் காட்சி பெறும் குழந்தைகள், கலைஞர்கள், கல்விச்சூழல், மற்றும் படைப்புகளோடு அந்த நிலத்தின் பண்பாட்டையும் பதிவுசெய்து வைக்க விரும்புகிறது இந்த அமைப்பு.

குட்டி ஆகாயம் எனும் இதழும் இதன் தொடர் முயற்சியே. சிறார்களை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் படைக்கச் செய்வது. இதில் பெரியவர்களின் தலையீடே இருக்காது என்பது மேலும் சிறப்பு. அவர்களின் எண்ணங்களை அப்படியே பதிவு செய்வது இதன் தனித்துவமான அடையாளம். அதிலும் குறிப்பாகக் குட்டி ஆகாயம் காலாண்டிதழின் சிறப்புப் பதிப்பாக வெளியான, சிறார்கள் மறந்துபோன நாட்டார் விளையாட்டுகளைக் கற்றல் அட்டைகள் (Flash Cards) வழி இதழை வடிவமைத்து

வெளியிட்டதே பெரிய சமூகச் செயல்பாடாகும். 2021ஆம் ஆண்டு (செப்டம்பர்) 12ஆவது இதழாக வெளிவந்த இந்த இதழில் குறிப்பிட்டுள்ள சில விளையாட்டுகளை விரிவாகக் காணலாம்.

**விளையாட்டு குறித்த செயல்பாடுகள்**

விளையாட்டுகள் நிறைந்த உலகில் ஐந்துநிமிடங்கள் கூட விளையாட முடியாதவர்கள் உண்டு. அதிலும் குறிப்பாக இன்றைய தலைமுறைச் சிறார்கள் கல்வி நிலையங்களில் கூட விளையாட முடியாத சூழலே பெருகிவருகின்றது. பலருக்கும் என்ன விளையாடுவது என்ற சிந்தனையிலேயே பல மணி நேரம் உருண்டோடி விடுகிறது. விளையாட்டு என்பது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பொதுவாக அவர்களுக்கு ஏற்றவாறு இருப்பினும், சிறார்களே அதற்கு உயிரூட்டுகிறார்கள் என்றால் மிகையில்லை.

நாட்டுப்புற விளையாட்டுகள் மீண்டும் நம் நினைவுகளில் மலரத்தொடங்கியது கொரோனா பெருந்தொற்றுக் காலக்கட்டத்திலே என்பது மறக்கவியலாது. அப்போதுதான் நம்முடைய பழைய நிகழ்வுகளும், நண்பர்களுடன் இணைந்து ஆடிய விளையாட்டுகளையும் நினைவுகூர்ந்து அசைபோடுவதாக அமைந்த காலமாக அமைந்தது. அதன் தொடர்ச்சியாக வெளிவந்த இந்த இதழும் அதனை மேலும் மெருகூட்டுவதாக அமைந்தது எனில் மிகையில்லை.

**குட்டி ஆகாயச் சிறார் இதழில் விளையாட்டுகள்**

குட்டி ஆகாயம் சிறார் இதழின் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத காலாண்டிதழே விளையாட்டுச் சிறப்பிதழாக வெளிவந்தது என்பது மேற்குறிப்பிடப்பட்டது. அவ்விதழில் குறிப்பிடத்தக்க எட்டு சிறார் விளையாட்டுகள் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றின் உள்ளடக்கமாக, **பூக்குதிரை, ஒளிந்துகொண்ட வார்த்தை, எண்ணா வார்த்தையா? பின்னங்கள், ஒரு கல் பாட்டு, வட்டம் பிடித்தல், நடிப்போ நடிப்பு, கோடு புள்ளி கிறுக்கல்** என்ற தலைப்புகளில் இடம்பெற்றிருந்தன. இவை அனைத்தும கற்றல் அட்டைகள் எனப்படும் Flash cards வடிவமைப்பில் வெளிவந்துள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விளையாட்டும் ஒவ்வொரு திறனைச் சிறார்களிடத்தில் வளர்ப்பனவாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

விளையாட்டுகளை அடையாளப்படுத்துவதற்கான இதன் நோக்கம், பலருக்கும் பல விளையாட்டுகள் தெரிவதே இல்லை. சில விளையாட்டுகள் கேள்விப்பட்டது கூட கிடையாது. சிறார்களுக்குப் புத்தகங்களை அறிமுகம் செய்வது போல இதுபோன்ற விளையாட்டுகளையும் அறிமுகம் செய்வதே இதன் முக்கிய நோக்கம் என அதன் ஆசிரியர் தெரிவிக்கிறார் **(வே. சின்னசாமி, சிறார் ஆசிரியர் குழு)**. இந்த இதழின் மேலும் ஒரு சிறப்பு என்னவென்றால் இதில் உள்ள ஓவியங்கள் சிறார்கள் வரைந்தவை. ஆசிரியர் குழுவில் உள்ள அனைவருமே பள்ளிச்சிறார்கள் என்பது மேலும் வியப்புக்குரியதாகும்.

**பூக்குதிரை**

பூ ஒன்றின் பெயரைச் சொல்லி ஒருவர் மேல் இன்னொருவர் ஏறி குதிரைபோல் விளையாடும் விளையாட்டின் பெயரே பூக்குதிரை எனப்படும்.

இதனைச் சொல் விளையாட்டு என்றும் அழைப்பர். இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். ஒரு பூவின் பெயரை நடுவராக இருப்பவரிடம் தெரிவித்து விட்டு, அவர் குனிந்து கொள்ளும்போது, மற்றவர்கள் ஒவ்வொரு பூவாகக் கூறி குனிந்து இருப்பவரைத் தாண்ட வேண்டும். தாண்டுபவர் யாரேனும் நடுவரிடம் கூறிய பூவின் பெயரைக் கூறினால் அவர் மீண்டும் தொடங்க வேண்டும் என்ற நிலையில் இவ்விளையாட்டு அமையும். இதன்மூலம் நிறைய பூக்களின் பெயரையும், அதன் தன்மையையும் அறிந்துகொள்ள இயலும்.

**ஒளிந்து கொண்ட வார்த்தை**

கரும்பலகையில் அல்லது சுவரில் எழுதப்பட்ட கலைக்கப்பட்ட தமிழ் எழுத்துகளைக் கொண்டு அதனை இணைத்து வார்த்தைகளை உருவாக்க வேண்டும். கலைந்து கிடக்கின்ற எழுத்துகளில் இருந்து வார்த்தைகளை உருவாக்கும்போது அவை மொழி வளர்ச்சிக்கு ஏதுவாக அமையும். இதனை மொழி விளையாட்டு என்றும் கூறலாம்.

இதுபோன்ற விளையாட்டின் வழியே தமிழ் எழுத்துகளை அறிமுகம் செய்யப்படுவதோடு, வார்த்தைகளின் உருவாக்கத்தையும் தெரிந்துகொள்ள உதவியாகிறது. இதில் தனித்தனியாகவோ, குழுவாகவோ இணைந்து விளையாடலாம். இதில் எந்த நபர் அல்லது குழு அதிக வார்த்தைகளைக் கண்டுபிடிக்கிறார்களோ அவர்களே வெற்றிவாகை சூடுவார்கள்.

**எண்ணா? வார்த்தையா?**

எண்களையும், வார்த்தைகளையும் மாற்றி மாற்றி விளையாடும் விளையாட்டு. இதன்மூலம் எண் பயிற்சியும், சிந்தனைத் திறனும் வளர்ச்சியடையும். இது குழுவில் உள்ள நபர்களைப் பொறுத்து மாறுபடும். குழுவில் எட்டு பேர் இருக்கும்போது, ஒன்று முதல் எட்டு வரையிலான எண்களைக் கூறிக்கொண்டு வரவேண்டும். அதில் ஒருவர் எண்ணுக்குப் பதிலாக விலங்கோ, பறவையோ, செடிகொடியோ என எதனையும் மாற்றலாம். அப்போது மீண்டும் தொடங்கி வர, எண்ணிற்குப் பதிலாக சொல்லப்பட்ட அந்த வார்த்தையை மாற்றாமல் அப்படியே கூற வேண்டும். மீண்டும் விளையாடும்போது எண்களை மாற்றிக்கொண்டே வரவேண்டும்.

எண்களை மாற்றிக்கொண்டே வந்து இறுதியில் அனைத்தும் முடிந்தபிறகு, எண்களுக்குப் பதிலாகக் கூறப்பட்ட சொற்களைக் கொண்டு கற்பனையில் கதையை உருவாக்க வேண்டும். இதன்மூலம் கற்பனைத் திறனையும் சிறார்கள் வளர்த்துக்கொள்ள இயலும். இதனை கதை விளையாட்டு என்றும் அழைப்பர்.

**பின்னங்கள்**

பின்னங்கள் என்றதுமே கணித விளையாட்டு என்ற எண்ணம் வருவது இயல்பு. இது கணித விளையாட்டே. கால், அரை, முக்கால், ஒன்று, சுழி என்ற பின்னங்களை ஆசிரியர் வகுப்பில் கூறலாம். அல்லது சிறார்களே தங்களுக்குள் விளையாடலாம். இதில் கால் என்று கூறும்போது உட்கார்ந்தும், அரை என்று சொல்லும்போது முழுங்கால் இட்டும், முக்கால் என்று சொல்லும்போது குனிந்து கால்களைத் தொட்டும், ஒன்று எனும்போது நிமிர்ந்து நின்றும், சுழி என்று கூறும்போது படுத்துக்கொண்டும் விளையாட வேண்டும். இதுபோன்று கூறும்போது நீண்ட நேரம் கவனித்தல் திறன் மேம்படுகிறது.

கற்றல் திறனில் முக்கியமானது கவனித்தல். ஒன்றைக் காதால் கேட்டு கவனிக்கும்போது அதன் வெளிப்பாட்டுத் திறன் அதிகரிக்கும். இதன்மூலம் இவ்விளையாட்டில் நீண்ட நேரம் விளையாடும் நபர் வெற்றியாளராகவும், திறன்மிக்கவராகவும் இருப்பார். மற்றவர்களும் இதனைக் கவனத்தில் கொள்வர்.

**ஒரு கல் பாட்டு**

பாட்டு என்று வருவதால் இதனைப் பாடல் விளையாட்டு என்றும் அழைப்பர். மகளிரின் விளையாட்டு என்று பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் இவ்வகை விளையாட்டு, மிகச்சிறிய கற்களை வைத்துக்கொண்டு மேல் தூக்கிப்போட்டு கீழே இருக்கும் கற்களை எடுத்தல் எனும்படி அமைந்திருக்கும். இதன்மூலம் கவனச் சிதறல் இல்லா மனநிலை மேம்படும். ஒவ்வொரு செயலையும் கவனத்தைக் குவித்துச் செய்யும்போது வெற்றியடையலாம்.

கற்களை எடுத்து விளையாடும்போதே அதன்கூடவே பாடலையும் சேர்த்து இசைத்தும் விளையாடுவது இவ்விளையாட்டின் இயல்பு. பழந்தமிழ் இலக்கியங்களில் சதகம் என்றும் கூறுவர். கழங்கு என்ற விளையாட்டாகவும் அமைகிறது. பாடல் எனும்போது,

**ஒண்ணாங்கல்லு ஒசந்தக் கல்லு**
**ரெண்டாங்கல்லு ரெத்தனப் பதக்கம்**
**மூணாங்கல்லு முத்துப் பதக்கம்**
**நாலாங்கல்லு நாகவடம்**
**அஞ்சாங்கல்லு பஞ்சாங்கம்**

என்றவாறு அமையும்.

**வட்டம் பிடித்தல்**

வட்டம் பிடித்தல் எனும் இவ்விளையாட்டு கோகோ எனப்படும் இன்றைய அறிமுகமான விளையாட்டாக இருக்கிறது. இது மைதானத்தில் விளையாடும் விளையாட்டு. இதில் இரண்டு குழுக்கள் பிரிக்கப்பட்டு, சிறிய வட்டத்தில் நிற்பார்கள். எதிரெதிர் குழுக்களாக இருப்பவர்கள் மாறி மாறி நிற்க முதலில் இருப்பவர் ஓடி

தன்னுடைய குழுவில் இருக்கும் நபரைத் தொட்டு அமர்ந்துகொள்ள, அமர்ந்திருந்த நபர் ஓடத்துவங்குவார். இதுபோன்று முதலில் இருந்து இறுதிவரை அனைவரும் வந்து அமர்வர். இதில் யார் முதலில் நிறைவு செய்கிறார்களோ அவர்களே வெற்றியாளர்கள். இதன்மூலம் உடல்வலிமை பெறுவதோடு, குழு மனப்பான்மை ஏற்படும்.

**நடிப்போ நடிப்பு**

நடிப்பு எனும்போது இது நாடக விளையாட்டாக அமைகிறது. இவ்விளையாட்டு இரு விதங்களில் நடத்தப்படுகிறது. முதலில் இரு குழுக்களாக பிரிந்திருந்து ஒரு குழுவினர் நடுவரிடம் கூறிய சொல்லையோ, வாக்கியத்தையோ நடித்துக்காட்ட வேண்டும். அதனை மற்றொரு குழுவினர் கண்டுபிடித்திட வேண்டும்.

மற்றொரு வகையான விளையாட்டு குழுத்தலைவர் ஒருவரை குழுவில் உள்ள அனைவரும் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபரை மற்றொரு குழுவினர் கண்டுபிடித்திட வேண்டும். அதனை இடையீடு செய்யும் பொருட்டு குழுத்தலைவர் போல் அனைவரும் ஒரே செய்கை செய்வர். இதன்மூலம் சிக்கல் நிறைந்த இடத்திலும் கவனத்தோடு தீர்வைத் தேடுவது போன்ற திறனை வளர்த்துக்கொள்ள இயலும்.

**கோடு, புள்ளி, கிறுக்கல்**

மூன்று விதமான ஓவிங்கள் இதில் இடம்பெறுகின்றன. கோடுகளை இணைத்தல், புள்ளிகளை இணைத்தல், கிறுக்கல்களில் வரைதல் போன்றன அடங்கும். விளையாட்டில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் காகிதம் வழங்கப்படும். அவரவர் விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் வரைவர். அனைவருக்கும் ஒரு விருப்பத்தேர்வு சொல்லப்படும். அதனை அவர்கள் கிறுக்கல்களாகவோ, கோடுகளாவோ, புள்ளிகளாகவோ வரைய வேண்டும். அதனை மீண்டும் மீண்டும் மாற்றி மாற்றி வரைய வேண்டும்.

இதன்மூலம் பல்வேறு ஓவியங்கள் கிடைக்கின்றன. இதனை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றி தரும்போது புதிய புதிய வடிவங்களில் தாங்கள் வரைந்த ஓவியங்கள் கிடைக்கப்பெறுவர். இதன்மூலம் பல்வேறு சிந்தனைத் திறன்களை ஒவ்வொருவரும் பெறுவர். தம்முடைய சிந்தனைகளையும் மற்றவர்களுடனும் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறுவர். இதனை ஓவிய விளையாட்டு என்றும் அழைப்பர்.

**முடிவாக,**

சிறார் இலக்கிய உலகில் விளையாட்டு என்பது பொழுதுபோக்குவதற்கு மட்டுமல்ல. அவை அவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டுவதிலும், ஆற்றலை வளர்ப்பதிலும் பெரும்பங்கு வகிக்கின்றது. சிறார்களுக்கான விளையாட்டுகள் என்பது யாரும் வற்றுபுறுத்தி வருவதில்லை. அவர்களாகவே தம்முடைய தொடர்புகளின் மூலம் உருவாக்கிக்கொள்கிறார்கள். இதன்மூலம் குறிப்பிட்ட ஒரு விளையாட்டு மட்டுமல்ல பல்வேறு விளையாட்டுகள் உருவாகின்றன. அவை மீண்டும் மீண்டும் விளையாடப்படும்போது அவை புகழ்மிகப் பெற்று அனைவராலும்

விளையாடப்படுகிறது. இவ்வாறு காலத்திற்குக் காலம் ஒவ்வொரு விளையாட்டும் தமிழுலகில் வளர்ந்தும் தேய்ந்தும் போய்விடுகின்றன என்பது உண்மை. அவற்றை ஆவணப்படுத்தும் குட்டி ஆகாயம் போன்ற இதழ்கள் இன்றைய காலத்திற்கு மிகத் தேவையாக உள்ளன என்பது நோக்கத்தக்கது.

**ஆய்வுக்குப் பயன்பட்டவை**


1. கருணாநிதி, மூ., நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுக்கள், தி பார்க்கர், 2001
2. பாலசுப்பிரமணியம், இரா., தமிழர் நாட்டு விளையாட்டுகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2003
3. குட்டி ஆகாயம் சிறார் காலாண்டு இதழ், இதழ் 12, செப்டம்பர் 2021
4. https://www.tamilvu.org/tdb/titles_cont/music/html/village_games.htm
5. https://mankavuchi.blogspot.com/2018/05/blog-post.html



**இணைப்பு**

சிறார் விளையாட்டுகள் குறித்த இதழில் வெளிவந்த சில பக்கங்கள்


**ஒரு கல் பாட்டு விளையாட்டு**



**பின்னங்கள் விளையாட்டு**



**ஒளிந்து கொண்ட வார்த்தை**



**பூக்குதிரை**

